


# காந்தி பொக்கிஷங்கள்!







**கா**ந்தியை மறந்து வரும் இன்றைய இளைய சமுதாயத்தில் வித்தியாசமான இளைஞராக இருக்கிறார் எம்.எல். ராஜேஷ்.

இவர் தேடித் தேடிச் சென்று காந்தியின் தபால்தலைகள், ரூபாய் நோட்டுகள், நாணயங்கள், புகைப்படங்களை பொக்கிஷங்களாக சேர்க்கிறார்.

அவர் சொல்கிறார்:

**பாக்கியம்**

"நான் திருவள்ளூர் மாவட்டம் புது கும்மிடிப்பூண்டியில் வசிக்கிறேன். அரிய தபால்தலைகள், ரூபாய் நோட்டுகள், நாணயங்கள், புகைப்படங்கள் சேகரிக்கிறேன். பிரபலங்களுடன் புகைப்படம் எடுத்து கையொப்பம் பெறுகிறேன்.

இதில் மகாத்மா காந்தி தொகுப்பை முக்கியமானதாக கருதுகிறேன். காந்தியின் நினைவாக இந்தியா உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் அஞ்சல் தலைகள் வெளியிட்டு பெருமை சேர்த்துள்ளன. இது வேறு எந்தத் தலைவருக்கும் கிடைக்காத பாக்கியம்.

இந்தியா வெளியிட்ட 42 அஞ்சல் தலைகள், அமெரிக்கா வெளியிட்டுள்ள 21 அஞ்சல் தலைகள் உள்ளன. காந்தியின் 9 இந்திய நாணயங்கள், 5 வெளிநாட்டு நாணயங்கள், ஏராளமான புகைப்படங்களும் எனது சேகரிப்பில் அடங்கும்.

காந்தி பிறந்த தேதியை வரிசை எண்களாக கொண்ட இந்திய ரூபாய் நோட்டுகளை கடினமான பல முயற்சிகளுடன் சேகரித்துள்ளேன். இதை மிகவும் சிரமாக அல்ல... பெருமையாக கருதுகிறேன்" என்கிறார்.



**ஆச்சரியம்**

எம்.ஏ. பட்டதாரியான இவருக்கு வயது 31. திருமணமானவர். 2 குழந்தைகளின் தந்தை. இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் பணிபுரிகிறார்.

இவரது அரிய தேடல்கள் ஆச்சரியப்படுத்துகின்றன. அதோடு, தெண்டுல்கர், ஸ்ரீகாந்த், டோனி என பல பிரபலங்களின் பிறந்தநாளைக் குறிக்கும் எண் கொண்ட ரூபாய் நோட்டுகளைச் சேகரித்து, அவர்களிடம் நேரில் காட்டி பாராட்டும் பெற்றுள்ளார்.



ராஜேஷ்

# விரும்பிக் கேட்ட கடைசிப் பாடல்

**கா**ந்தியடிகளுக்கு பஜனைப் பாடல்கள் என்றால் உயிர். ஒருமுறை 'ஹரிதும் ஹரோ' என்ற மீராவின் பஜனைப் பாடலை கேட்க நேர்ந்தது. உடனே அதை இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமி குரலில் கேட்க ஆசைப்பட்டார். இதுபற்றி சென்னையில் இருந்த எம்.எஸ்.சு.க்கு தகவல் வந்தது.

"அப்பாடலின் ராகம் தெரியாதிருக்கும் நான் பாடுவதைவிட, தெரிந்த வேறு யாரையாவது பாடச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டார் சுப்புலட்சுமி.

காந்தியடிகளோ, "அதை அவர் ராகமாக பாடாவிட்டாலும் பரவாயில்லை. வசனமாக படித்தாலே போதும். இது நிறைவேறினால் இப்பிறவியின் பயனை அடைந்துவிடுவேன்" என்றார்.

இதை அறிந்து மனம் உருகிவிட்டார் சுப்புலட்சுமி. "ஒரு பாடலை வசனமாக படிக்க எனக்குப் பிடிக்காது. அதனால், அதன் ராகத்தைக் கற்றுக்கொண்டு பாடுகிறேன்" என்று இரவோடு இரவாக பாடலை கற்று– கேசட்டில் பதிந்து அனுப்பி வைத்தார். காந்திஜி மிகவும் ரசித்து பாடலைக் கேட்டார். மறுநாள் துரதிருஷ்டவசமாக கோட்சேயால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

*– ஜெய்ஸ்ரீ, சென்னை.*



வாராந்தரி

# ராணி

குடும்பப் பத்திரிகை

3.10.2010 ரூ.7



**தமிழ்நாட்டில் காளகஸ்தி**

**நான் சூழ்நிலைக் கைதி**

**– திருமாவளவன்**